திரு. என். கிட்டப்பா : மாயூரம் தொகுதி மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதை சீர்கேடாக இருக்கிறது. பொதுமக்கள் இதுபற்றி பல ஆண்டுகளாக கோரிக்கை எழுப்பிவருகிறார்கள். இனிமேலாவது அதைக் கவனித்து அரசு உத்தரவு வழங்கி, அதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரம் மணல்மேடு முதல் வக்காரமாரி வரை செல்லும் சாலையில் மொத்த நீளம் 2.00 கிலோ மீட்டர். இது மணல்மேடு முடிகொண்டான் ஊராட்சி சாலையாகும். இச்சாலையைச் செப்பனிட தோராயமாக ரூ. 65,000 செலவாகும். இவ்வேலையின் மொத்த செலவு ரூ. 40,000-க்கு மேல் உள்ளதால் இதை 'இதரச் சாலைகள்' என்ற தலைப்பில் எடுத்துச் செயல்படுத்த வேண்டியதாகும். ஆனால் இவ்வேலை எந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. 'இதர சாலைகள்' தலைப்பில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகளில் பெரும்பாலானவையை நிதிப் பற்றாக்குறை நிமித்தம் செயல்படுத்த இயலவில்லை. எனவே, இவ்வேலையானது வளமான காலம்வரை பொறுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

பொட்டல் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***502 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பொட்டல் ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1963-ம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இன்னமும் அந்த நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

1973 நவம்பர் 29]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) பொட்டல் கிராமத்தில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்குப் பதிலாகத் தரை மட்ட நீர்த்தேக்கம் ஒன்று தற்சமயம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

(இ) மேற்படி வேலையை எடுத்து நடத்த ஒப்பந்தக்காரர்கள் எவரும் முன்வராத காரணத்தாலும், எதிர்பாராத சில நிர்வாக காரணங்களாலும் இக்கிராமத்தில் மேல் நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை மேற்கொள்ளப்படவில்லை.

தெரு விளக்குகள் களவு போவதைத் தடுத்தல்

***503 வினா—திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

நமது மாநிலத்தில் தெரு விளக்குகள் உள்ள இடங்களில் மின்சார பல்புகள் திருட்டுப் போவதைத் தடுப்பதற்காக எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது போன்று சில சமூக விரோதச் செயல்கள் நடைபெறுகின்றபொழுது வாரிய அதிகாரி களின் மூலம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மூலம், உறுப்பினர்கள் மூலம், பொதுமக்கள் மூலமாகத் தகவல் வருகின்ற பொழுது காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கின்றனர்.

திரு. எம். சுரேந்திரன்: தெரு விளக்குகள் ஏராளமாக திருட்டுப் போகின்றன என்று புகார்கள் பல வருடங்களாக இருந்து கொண்டு வருகின்றன. வருடத்திலே சராசரியாக எவ்வளவு பல்புகள் திருட்டுப் போகின்றன? அதைத் தடுப்பதற்கு ஏதாவது நடைமுறை இருக்கிறதா? அப்படியிருந்தால் அதை அரசு கையாண்டு வருகிறதா? அம்மாதிரி இருந்தால் அது என்ன என்பதை அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பொதுவாக திருட்டுப் போனால் அதற்கு வேண்டிய பிராது, அதாவது திருட்டுப் போயி ருக்கிறது என்று போலீஸுக்குத் தெரிவிக்கின்றபொழுது அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். சில நேரங்களில் ஊராட்சி மன்றப் பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் நடக்கின்றபொழுது